# திருமுருகாற்றுப் படை

நம் பழந்தமிழ்ச் சான்றோர் நுண்ணிய பேரறிவாளராகத் திகழ்ந்தனர். அவர்கள் உயர்வையே எண்ணினர். அவ்வாறு எண்ணியும் உணர்ந்தும் தெளிந்த பொருள்களுள் 'முருகு' என்பதும் ஒன்று. இம் ''முருகு'' என்னும் சொல்லுக்குக் கடவுட் தன்மை இளமை, மணம், அழகு முதலிய பொருள் நிலை கண்டனர். இதனுள் பொதிந்து கிடக்கும் நுட்பமான பொருள் கந்தழி என்னும் கட்டற்ற ஒன்று. அதுவே என்றுமுள இயற்கை, அவ்வியற்கையே இறைமை எனனும் செம்பொருள்.

இவ் வியற்கை எழில் நலத்தை நாட்டிலும் காட்டிலும் மலையிலும், கடலிலும் வைத்துப் போற்றினர் நம்பழந்தமிழ் மக்கள். இதனை,

''மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்''

என்று தொல்காப்பியர் எடுத்துக் காட்டுவார்.

இவற்றுள் சேயோன் என்பது முருகு, முருகே முருகன் எனப்பட்டான். மலையும் மலைசார்ந்த நிலத்தெய்வம் முருகன் ஆவான்.

பத்துப் பாட்டினுள் ஐந்து பாட்டுக்கள் ஆற்றுப்படை என்னும் புறத்துறை ஒன்றனையே பற்றி இயற்றப் பட்டனவாகும்.

''கூத்தரும் பாணரும் பொருநரு விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறுவார்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்......''

(தொல் புறத். நூ: 36)

என்ற தொல்காப்பியர் விதிப்படி, பெருவளம் பெற்றான் ஒருவன் பெருவளம் பெறும் விருப்புடைய ஒருவனுக்கு அறிவுறுத்தி வழிப்படுத்துவதே ஆற்றுப்படை. இத் திருமுருகாற்றுப் படையைப் ''புலவராற்றுப்படை'' என்றும் கூறுவர்.

இந்நூல் தலைசிறந்த இலக்கிய இன்பத்தைத் தருவதோடு முருகவேளின் ஒப்புயர்வற்ற பெரும் பேறாகிய திருவடிப் பேற்றினையும் அருளுவதாகும். எனவே இது சங்க இலக்கியப் பத்துப்பாட்டில் முதற் பாட்டாகவும், பதினோராந் திருமுறையில் ஆண்டவன் பாட்டிற்கு அடுத்த பாட்டாகவும் விளங்கி நிற்கிறது.

மகன் வழித் தந்தையைக் காணுமாப் போல திருமுருகனே சிவபெருமான். எனவே எனவே இது சைவத் திருமுறையாகிய பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படைஒரு தனி நூல். இது ஒரே ஆசிரியப்பாவில் அமைந்தது.

நக்கீரர் இதனைத் திருப்பரங் குன்றத்திலிருந்து பாடினார். என்றாலும் இவர் முன் காட்சி தந்தது திருச்சீரலைவாய்த் திருமுருகனே!

'உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல்கண்டா அங்கு
ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிரொளி''

என்று திருப்பரங்குன்றத்திலிருந்து மிக்க தொலைவில் உள்ள திருச்செந்திற் காட்சியை ஆசிரியர் விவரிப்பது ''சேண்'' என்ற சொல்லாலே விளங்கும்.

செந்தில் வேலவனைக் கூவி அழைத்த ஆசிரியர் உடனே தாமிருந்த திருப்பரங்குன்றத்தின் 'வாள்நுதல் கணவனை'' எண்ணி வாழ்த்துகின்றார்.

முருகன் ''தண்தார்புரளும் மார்பினன். அந்த மாலை கடப்ப மாலை, கடம்பு கானகத்தில் வளர்வது, அது செழித்து வளர்வதற்கு மாமழை வேண்டும். நாம் அனைவரும் சிறந்து வாழ்வதற்கு இறைவன் அருள் வேண்டும்

அவ் வருளை ஆறு படை வீடுகளில் தங்கியுள்ள திருமுருகனைக் கண்டால் பெறலாம் என்று செந்தமிழ் தெய்வப் புலவர் நக்கீரனார் ஆற்றுப்படுத்துகிறார். அப்படி ஆற்றுப் படுத்துமுன் திருமுருக வழிபாட்டால் நினைத்தது கை கூடும் என உறுதி கூறுகிறார். (1 – 66 அடிகள்)

| | | | |
|---|---|---|---|
| 1 | திருப்பரங் குன்றம் | (குறிஞ்சி) | 67 - 77 |
| 2 | திருச்சீரலை வாய் | (நெய்தல்) | 78 – 125 |
| 3 | திருவாவிநன்குடி | (முல்லை) | 126 – 176 |
| 4 | திருவேரகம் | (மருதம்) | 177 - 189 |
| 5 | குன்று தோறாடல் | (பாலை நில மலையும் அடங்கும்) | 190 - 317 |
| 6 | பழமுதிர் சோலை | (குறிஞ்சி) | 218 – 317 |

இங்ஙனம் வைப்பு முறையாகக் கொண்டு புலவரவர்கள் பாடுகின்றார்.

நக்கீரனார் திருப்பரங்குன்றத்தை முதலாவதாகக் கூறுவதற்குக் காரணம் திருமுருகன் திருவருளாலே பாடித் திருவருளைப் பெற்ற நூலுக்கு முதற்கண் போர்க்களப் படை வீடாகிய திருச் சீரலை வாயைப் பாடுவதைக் காட்டிலும் மங்கலம் பற்றித் திருமுருகன் தெய்வயானையைத் திருமணம் செய்து மணக்கோலத்தோடு எழுந்தருளியிருக்கும் திருப்பரங் குன்றத்தினை முதற்கண் கூறிமகிழ்கின்றார். அவர் வாழ்ந்த மதுரை மாநகர்க்கு அண்மையில் (மேற்கில்) திருப்பரங்குன்றம் இருந்ததும் காரணமாகலாம். ''மாட மலி மறுகின் கூடல் குடவயின்'' என்பது திருமுருகாற்றுப் படை.

குன்றுதோறாடல் என்பது ஒரு தனிக்குன்று அன்று. குன்றுதோறும் எழுந்தருளி விளையாடல் என்பது இதன் பொருள். கழுகுமலை, திருமலை, திருத்தணி, வள்ளியூர், திருப்போரூர், வயலூர், திருவண்ணாமலை முதலிய இடங்களையும் குறிக்கும், இலங்கையில் கதிர்காமத்திலும் மலையநாட்டிலும் (மலேசியா) முருகன் எழுந்தருளியுள்ளான்.

இவ் வாற்றுப் படை இறுதியில் பழமுதிர் சோலை மலையின் இயற்கை வளத்தை ஆசிரியர் மிக அழகொழுக எழுதிக் காட்டுகின்றார். அவை

வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்து

.............................. ... .....................

இழுமென இழிதரும் அருவிப் பழமுதிர் சோலை மலை...... (296 - 317)

என்ற வரிகளால் படித்துப் படித்துச் சுவைக்கலாம்.

இறுதியில், இந்நூலைப் படிப்பார்க்கும், திருமுருக வழிபாடு செய்து ஓதுவார்க்கும், ''அணங்குசால் உயர் நிலை தழீஇப் பண்டைத்தன் மணங்கமழ் தெய்வத்து இள நலங் காட்டி

மகிழ்வித்துத் திருமுருகன் அருள்புரிவான், இதனையே ஆற்றுப்படை யாக்கிச் செந்தமிழ்த் தெய்வப் புலவர் பெருமகனார் உரைக்கின்றார்.

இத் திருமுருகாற்றுப் படையினை எமது ஒரேயொரு அருமைச் சகோதரர் காலஞ்சென்ற இளைப்பாறிய தபாலதிபர் செல்லத்துரை தேவராசா அவர்களின் நினைவாகத் தமிழர் கரங்களில் திகழச் சமர்ப்பிக்கிறேன்.

செ. குணரத்தினம்

12, நிற்றீட் றோட், கொழும்பு-4. ஒய்வு பெற்ற அமைச்சுச் செயலாளர்

# திருமுருகாற்றுப் படை ஆசிரியர் நக்கீரர் வரலாறு

பண்டைத் தமிழ் இலக்கியங்களுள் தலைசிறந்து விளங்கும் பத்துப் பாட்டினுள் முன்னிற்கும் சிறப்புடைய திருமுருகாற்றுப்படை நூலை இயற்றியவர் நக்கீரர் என்னும் நல்லிசைப்புலவராவார். இவர் மதுரைக் கணக்காயனாருக்கு (ஆசிரியர்) மகனார் ஆவர். இவர் மதுரையில் பிறந்தவர் என்பது அடைமொழியால் அறியப்படும்.

கீரர் என்பது இவரது இயற்பெயர். 'ந' என்பது சிறப்பினைக் குறிப்பதோர் இடைச்சொல்; அதனைச் சேர்த்து இவர் நக்கீரர் எனப் பெயர் வழங்கப் பெற்றார்.

பத்துப்பாட்டிலுள்ள 'நெடுநல்வாடைப்' பாடலும் இவரால் பாடப்பட்டதே. நற்றிணையில் ஏழு செய்யுட்களும், குறுந்தொகையில் எட்டுச் செய்யுட்களும். அகநானூற்றில் பதினேழு செய்யுட்களும் இவரால் பாடப்பட்டவை.

இறையனார் அகப் பொருளுக்கு உரை கண்டவர் நக்கீரர் என்பவர். இவருடைய மகனார் கீரங்கொற்றன் என்னும் புலவராவார்.

மதுரையில் வாழ்ந்த குயக்கொண்டான் என்பவன் மதுரைப் பட்டி மண்டபம் ஏறித் தமிழ்மொழியைக் காட்டிலும் வடமொழியே சிறந்தது என்று வாதிட்டான். அது கேட்டுச் சினந்த நக்கீரனார் அவன் மாள அறம் பாடினார். உடனே அவன் இறந்தான். அதனைக் கண்ட புலவர் சிலர் அவன் மீது திருவருள் கொண்டு உயிர்த்தெழச் செய்ய வேண்டினர். நக்கீரனார் சினந்துறந்து அவன் உயிர் பெற்று எழுமாறு பாடினார். குயக்கொண்டான் உயிர்பெற்று எழுந்து, குற்றத்தை மன்னித்தருளுமாறு வேண்டி, அவருக்குத் திருவடித் தொண்டு புரிந்தான்.

குறுந்தொகையில் உள்ள "கொங்குதேர் வாழ்க்கைப்" பாடலால் இவருக்கும் இறைவனுக்கும் சொற்போர் நிகழ, இறைவன் நெற்றிக் கண்ணைக் காட்டினார். நக்கீரர் "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்று கூறியதைக் கேட்டுச் சினந்து இறைவன் புலவரை நோயுறச் செய்தார். பின்னர் இறைவனை இறைஞ்சி நோய் நீங்கப் பெற்றார் இதனைத் திருவிளையாடல் புராணம் கூறும்.

பத்துப் பாட்டுக்குக் காப்பாகத் திகழ்வது திருமுருகாற்றுப் படை. இவரைச் சைவர்கள் நக்கீர தேவ நாயனார் என்றழைப்பர். மதுரை, திருப்பரங்குன்றம், திருஈங்கோய்மலை, திருக்காளத்தி ஆகிய கோவில்களில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பாலிக்கின்றார்.

# திருமுருகாற்றுப் படை வெண்பா

இப் பகுதியில் உள்ள பத்து வெண்பாக்கள் பிற்காலச் சான்றோரால் இயற்றியமைத்தனவாகக் கருதப்படுகிறது. இவை இனிமையும் நயமும் மிக்கவை. அவை:

குன்றம் எறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய் - என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே!
உளையாய் என் உள்ளத் துறை.

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் – இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்!

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் – வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை!

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா! – முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்!

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் – பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ்வே!

அஞ்சு முகந்தோன்றின் ஆறு முகந்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் — நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்!

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே – ஒரு கைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா – பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி!

பரங்குன்றில் பன்னிருகைக் கோமான்றன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு - சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே! அணிமுருகாற்றுப்படையைப்
பூசையாகக் கொண்டே புகல்!

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினால் - முற்கோல்
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைந்த எல்லாந் தரும்!

திருமுருகாற்றுப் படையை நாள்தோறும் ஓதும் சான்றோரால் கீழ்வரும் கட்டளைக் கலித்துறையும் ஓதப்படுகிறது.

ஒருமுரு காவென்றன் உள்ளங் குளிர உவந்துடனே
வருமுரு காவென்று வாய்வெரு வாநிற்பக் கையிங்ஙனே
தருமுரு காவென்று தான்புலம் பாநிற்பத் தையல் முன்னே
திருமுரு காற்றுப் படையுட னேவருஞ் சேவகனே!

நக்கீரர்

அருளிய

# திருமுருகாற்றுப்படை

## ஆற்றுப்படுத்துதல்

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்(கு)
ஓவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
யுறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்
திருள்படப் பொதுளிய பராரை மராஅத்
துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்
மால்வரை நிவந்த சேணுயர் வெற்பிற்
கிண்கிணி கவைஇய வொண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோட்
கோபத் தன்ன தோயாப் பூந்துகிற்
பல்காசு நிரைத்த சில்கா ழல்குற்
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழை
சேணிகந்து விளங்கும் செயிர்தீர் மேனி
துணையோர் ஆய்ந்த இணையீர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் கிள்ளி
பைந்தாள் குவளைத் தூஇதழ் இடைஇடுபு
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழ மண்ணுறுத்துத்
துவர முடித்த துகளறும் உச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்(டு)
உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்(பு)
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி ஒண்டளிர்
நுண்பூண் ஆகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்

வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளில் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
''கோழி ஓங்கிய வென்றடு விறல்கொடி
வாழிய பெரிது'' என்று ஏத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடி
சூரர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பும் மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கஉள் புக்குச்
சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேள்
உலறிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை யலைக்குங் காதின் பிணர்மோட்(டு)
உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித் தோள்பெயரா
நிணந்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேரி யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ் இணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து
எய்யா நல்லிசைச் செவ்வேல் சேஎய்
''சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்புரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை யாயின், பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே''

## திருப்பரங்குன்றம்

''செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிபுனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகின் கூடல் குடவயின்
இருஞ்சேற்று அகழ்வயல் விரிந்து வாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள் கமழ் நெய்தல் ஊதி எற்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந் துறைதலும் உரியன்.
அதா அன்று.''

## திருச்சீரலைவாய்

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்
கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பின்
கால்கிளர்ந் தன்ன வேழம் மேற்கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுறழ் இமைப்பின் சென்னிப் பொற்ப,
நகை தாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ,
அகலா மீனின் அவிர்வன விமைப்பத்
தாவில் கொள்கைத் தம் தொழில் முடிமார்
மனனேர் பெழுதரு வாணிற முகனே!

## திருமுகங்களின் அருட் செயல்

மாயிருள் ஞாலம் மறு இன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்; ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத் தன்றே;
ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே; ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசை விளக் கும்மே;
ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே;
ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே;

## திருமுருகன் தோள்கள்

ஆங்கு அம்
மூவிரு முகனும் முறைநவின் றொழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பின்
செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடாவிடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர்தோள்

## திருக்கைகள்

விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை; உக்கம் சேர்த்தியது ஒருகை;
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇய
தொருகை
அங்குசம் கடாவ ஒருகை; இருகை
ஐயிரு வட்டமொடு எஃகுவலந் திரிப்ப; ஒருகை
மார்பொடு விளங்க; ஒருகை
தாரொடு பொலிய; ஒருகை
கீழ் வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப;
ஒருகை
பாடின் படுமணி இரட்ட; ஒருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய;
ஒருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட;
ஆங்கப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி

## திருமுருகன் திருச்சீரலைவாய்ச் சேறல்

அந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்
வயிரெழுந்(து) இசைப்ப வால்வளை ஞால
உரந்தலைக் கொண்ட உருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பா றாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே,
அதா அன்று,

## திருவாவிநன்குடி

சீரை தைஇய உடுக்கையர்; சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்;
மாசற இமைக்கும் உருவினர்; மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பெழுந் தியங்கும் யாக்கையர்; நன்பகற்
பலவுடன் கழிந்த உண்டியர்; இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர்; யாவதும்
கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர்; காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சியர்; இடும்பை
யாவதும் அறியா இயல்பினர்; மேவரத்
துனியில் காட்சி முனிவர் முன்புக

## கந்தருவர் யாழ்வாசிக்கத் தம் மகளிரொடு வந்த காட்சி

"புகைமுகந் தன்ன மாசில் தூஉடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்னரம் புளர
நோயின றியன்ற யாக்கையர்; மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர்; அவிர்தொறும்
பொன்னுரை கடுக்கும் திதலையர் இன்னகைப்
பருமம் தாங்கிய பணிந்தேந்து அல்குல்
மாசில் மகளிரொடு மறுவின்றி விளங்கக்"

## திருமால் திருமுருகன்பால் வருதல்

கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வால் எயிற்(று)
அழலென உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும்; வெள்ளேறு

## உருத்திரன் திருமுருகன்பால் வருதல்

வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்

## இந்திரன் திருமுருகன்பால் வருதல்

நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து
ஈரிரண் டேந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்;

## மூவரும் நான்முகன் பொருட்டு வந்தனர்

நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவ ராக
ஏமுறு ஞாலந் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முகன் ஒருவர் சுட்டிக், காண்வரப்

## வானவர் தேவர்கள் திருவாவிநன்குடி வந்து நிற்கும் காட்சி

பகலில் தோன்றும் இகலில் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு
ஒன்பதிற் றிரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர்; மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர்; வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர்; தீப்பட
உருமிடித் தன்ன குரலினர்; விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காண

## முருகன் ஆவிநன்குடியில் அமர்ந்திருத்தல்

தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவி நன்குடி அசைதலும் உரியன்.
அதா அன்று.

## திருவேரகம்
## ஏரகத்து அந்தணர் இயல்பு

"இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்று வகைக்குறித்த முத்தீச் செல்வத்(து)
இருபிறப்பாளர்" பொழுதறிந்து நுவல

## அந்தணர் முருகனை வழிபாடு செய்யும்முறை.

ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாவியல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்து
ஏரகத் துறைதலும் உரியன், அதா அன்று,

## குன்று தொறாடல்
## வேலன் ஒப்பனை - கானவர் குரவை

பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளந் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பில்
கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபாறைக் குரவை யயர

## மகளிர் தொகுதி

விரல் உளர்ப்ப அவிழ்ந்த வேறுபடு நறுங்கான்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை இலையுடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வாலிணர் இடைஇடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு

## முருகன் அருளுதல்

செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடியன் நெடியன் தொடியணி தோளன்
நரம்பார்த் தன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலனேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே
அதா அன்று

## பழ முதிர் சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயின்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறியயர் களனும்
காடுங் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையிலும்

## வழிபாட்டு வகை

ஆண்டலைக் கொடியொடு மண்ணி அமைவர
நெய்யொடு ஐயவி யப்பி ஐது ரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
மதவலி நிலைஇய மாதாள் கொழுவிடை
குருதியொடு விரைஇய தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர் நறுந்தண் மாலை
துணையுற வறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை அருவியொடு இன்னியங் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்த உருகெழு வியநகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலும் அறிந்த வாறே.

## முருகன் அமர்ந்து ஏத்தல்

ஆண்டாண் டாயினும் ஆக; காண்தக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப,
அறுவர் பயந்த ஆறமர் செல்வ!
ஆல்கெழு கடவுள் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி! வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பின் பழையோள் குழவி!
வானோர் வணங்குவில் தானைத் தலைவ!
மாலை மார்ப! நூலறி புலவ!
செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ! மைந்தர் ஏறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!
அரும் பெறல் மரபின் பெரும்பெயர் முருக!
நசையுநர்க் கார்த்தும் இசைபே ராள!
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூண் சேஎய்!
மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்!
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்!
சூர் மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி!
போர்மிகு பொருந! குரிசில்! எனப்பல
யானறி யளவையின் ஏத்தி ஆனாது,
''நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி யுள்ளி வந்தனென் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமையோய்!'' எனக்
குறித்தது மொழியா அளவையின் குறித்துடன்
வேறுபல் உருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெரும! நின் வண்புகழ் நயந்தென
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந் தெய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவு'' என
அன்புடை நன்மொழி அளைஇ விளிவின்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து

ஒரு நீ ஆகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி, பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்து
ஆரம் முழுமுதல் உருட்டி வேரல்
பூவுடை அலங்குசினை புலம்ப வேர்கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியின் தொடுத்த
தண்கமழ் அலரிறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாகம் நறுமலர் உதிர ஊகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப்பொன் கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலொ(டு)
இரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாவடி உளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்லேறு சிலைப்பச் சேணின்று
இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே!

## ஆற்றுப்படை—வழிப்படுத்துதல்

அருளாளன் திருமுருகப் பெருமானைக் காணப் பேராவல் கொண்டு புறப்பட்ட அடியவன் ஒருவனுக்குத் திருமுருகன் புகழ் கூறித் திருமுருக வழிபாட்டால் நினைத்தது உடன் கைகூடும் என உறுதி கூறியது.

திருமுருகனை நேரில் கண்டறிந்த தொண்டன் ஒருவனுக்கு முன்னால் திருமுருகனைக் காண விரும்பிய ஒருவன் வருகிறான். அவனுக்குத் திருமுருகன் திருக்கோலத்தைக் கண்டறிந்த தொண்டன் பின்வருமாறு கூறுகிறான்.

## திருமுருகன் ஒளிவடிவானவன்

### 1-3. "உலகம் உவப்ப...... அவிர் ஒளி,"

பொழிப்புரை:

உலகத்தில் வாழும் உயிர்கள் எல்லாம் மகிழ்ச்சி அடையும்படி அவற்றுக்கு வலிவினையும், பொலிவினையும் தந்து திரிகின்றான் ஞாயிறு. அதனால் அஞ்ஞாயிற்றை அறிஞர் பலரும் புகழ்கின்றனர். விரியும் ஒளியையுடைய ஞாயிறு நீல நிறமான கடல் மேலே எழுவதைக் கண்டது போலத் திருமுருகன் அவிரும் ஒளியை யுடையவனாய் நீல நிறமான மயில்மேலே தூரத்தில் தோன்றி விளங்குகின்றான்.

காண்கின்றவர் உள்ளம் பிற பொருள்களின் மேற்சென்று தங்குதல் அற்றுப் போகும்படி மின்னுவதும், தூரத்தில் இயற்கையாக விளங்குகின்றதுமாகிய ஒளியையுடையவர் கதிரவனும் திருமுருகனும்.

விளக்கவுரை:

இரவில் நிரம்பிய இருளில் கிடந்து கண்ணிருந்தும் பொருள்களைக் காணமாட்டாது தட்டழியும் உயிர்களுடைய கண்ணுக்கு ஒளிதந்து, பொருள்களைக்காணும் ஆற்றலும் அதனால் முகப்பொலிவும் உயிர்கள் யாவும் பெறும்படி இருள் உருவான கடல் மேலே தூரத்தில் விரிந்த ஒளிக்கற்றைகளுடன் ஞாயிறு தோன்றுகிறான். அங்ஙனமே அறியாமையாகிய இருளிலே கிடந்து திண்டாடும் உயிர்களுக்கு அறிவுக் கண்ணைக் கொடுத்து அவை பொருள்களின் உண்மைத் தன்மைகளை அறியும் ஆற்றலையும், அதனால் முகப்பொலிவினையும் பெறும்படி செய்து கடல் வண்ணமாக மயில் மேலே திருமுருகன் விரிந்த ஒளியுடன் உயிர்கள் முன் காட்சியருள்கின்றான். விடியும் நேரத்திலே தவறாது ஞாயிறு தோன்றுவதுபோல் அருள்தரும் நேரத்திலே தவறாது திருமுருகனும் உயிர்கள் முன் தோன்றுகிறான். ஞாயிற்றின் தன்மைகளை அறிந்த அறிஞர் பலர் அவனைப் புகழ்கின்றார்கள். அங்ஙனமே ஞானக்கண்ணால் திருமுருகன் புகழை அறிந்த முனிவர் பலர் அவனைப் போற்றிப் புகழ்ந்து வழிபடுகின்றார்கள்.

"ஞாயிறு இருளைக் கெடுக்குமாறு போலத் தன்னை மனத்தால் நோக்குவார்க்கு மாயையைக் கெடுத்தலின் தொழில் உவமமும்; தன்னைக் கட்புலனால் நோக்குவார்க்கு கடலின் பசுமையும், ஞாயிற்றின் செம்மையும் போல மயிலின் பசுமையும் திருமேனிச் செம்மையும் தோன்றலின்வண்ண உவமமும் கொள்ளக்கிடந்தமை காண்க," நச்சினார்க்கினியர்.

## தேவயானை கணவன்

### 4-3, ''உறுநர்த் தாங்கிய...... கணவன்''

பொழிப்புரை:

நெருங்கிவரும் அடியார்களைத் தாங்கிக் காக்கின்ற அருளாகிய அழகுடைய வலிமை பொருந்திய திருவடிகளை உடையவன். திருவருளுக்குப் பகைவர்களாகித் தகாதன செய்யும் கொடியவர்களுடைய அறியாமையாகிய ஆணவத்தை அழித்து, மேகம் போலத் திருவருள் மழை பொழிந்து நல்வழிப்படுத்திக் காப்பாற்றுகின்ற பெரியகைகளை உடையவன், குற்றம் இல்லாத கற்பினைப் பூண்ட ஒளிவீசும் நெற்றியையுடைய தேவயானை அம்மைக்குக் கணவன் திருமுருகன். ........

விளக்கவுரை:

அடைந்தவர்களைக் காப்பது அறக்கருணை, அடையாதவர்களைத் துன்பந் தந்து நெறிப் புகுத்துவது மறக்கருணை. மதன் உடை—ஆணவ மலத்தை அழித்தல். செல்-மேகத்தின் ஒலியாகிய இடி. வாணுதல் - அன்மொழி.

''வாள் ஒளியாகும்'' - தொல். சொல். 367.

## கடப்ப மாலை புரளும் மார்பினன்

### 7-11 கார்கோள் ........... மார்பினன்

பொழிப்புரை:

கடலின் நீரை முகந்த நிறைந்த கருக் கொண்ட பெரிய மேகம் மின்னொளி பிளக்கும் விண்ணிலே நிரம்பிய மழைநீர்த் துளிகளைப் பரப்பியது; அது மழைக்காலத்து முதன் மழையைப் பொழிந்தது; அதனால் காடு குளிர்ந்தது. அதன் விளைவாக மரங்கள், செடிகள் தளிர்த்துப் பூத்தமையால் மணம் சமழ்ந்தது. அக் காட்டில் இருள் உண்டாகும் படி கிளைத்துத் தளிர்த்த பெரிய அடி மரத்தையுடைய செங்கடம்பு மரம் தேருருளை போன்ற பூக்களைப் பூத்திருந்தது. அப்பூக்களால் தொடுக்கப்பெற்ற குளிர்ச்சியான மாலை அசையும் மார்பினை உடையவன் திருமுருகன்.

விளக்கவுரை:

கார் கோள் என்பது கடல், மேகத்தினாலே நீர் முகந்து கொள்ளப்படுவது. பராரை-பருத்த அடிமரம். மரா—மரவம்: செங்கடம்பு. கடப்பம்பூ தேர் உருளை வடிவினது.

## கைபுனைந்து இயற்றாக் கவின்

### '12-19 ''மால் வரை ......... செயிர்தீர் மேனி''

பொழிப்புரை:

பெரும் மூங்கில்கள் ஓங்கி வளர்ந்துள்ள வானத்தின் உயர்ந்த மலைமேலே கூடிய சூரரமகளிர் சலங்கைகட்டிய, இயற்கை அழகு கொண்ட, சிவந்த சிறு பாதங்களை உடையவர்; திரண்ட காலையும் வளைந்த இடையையும் மூங்கிலைப் போன்ற தோள்களையும் உடையவர்; இந்திர கோபப் பூச்சியைப் போலச் சாயம் ஏற்றாமலே இயற்கையாகச் செந்நிறம் அமைந்த அழகிய ஆடை அணிந்தவர்; பல பொற்காசுகளை வரிசையாகக் கோத்த ஏழு வடமான மேகலை என்னும் அணியை அணிந்த இடுப்பினை

உடையவர்; கையினால் ஒப்பனை செய்து ஆக்கப் பெறாது இயற்கையாகக் கவர்ச்சி பெற்ற அழகினையும், நாவல் என்ற சொல்லோடு பெயர் பெற்ற பொன்னினாலே செய்யப்பெற்று விளங்குகின்ற அணிகலன்களையும், கண்காணும் எல்லையினையும் கடந்து ஒளிவீசும் குற்றம் நீங்கிய நிறத்தினையும் உடையவர்.

விளக்கவுரை:

பொன் – பொலம் ஆயிற்று. தொல் புள்ளிமயங்கியல் (355)

சூரர மகளிர் ஆடுங் கோலம்

20 - 32. துணையோர் ......... ஆகம் திளைப்ப''

பொழிப்புரை:

ஒத்த தன்மையினராகிய சூரர மகளிர் தம்முள், ஒருவர்க்கொருவர், சிக்கெடுத்து, விரிந்துள்ள கடையொத்த இழுத்துப்பின்னிய கூந்தலை உடையவர். அவர்கள் சிவந்த காம்பினை உடைய வெட்சியின் சிறிய பூக்களை அக்கூந்தலின் இடைஇடையே விடு பூவாக இட்டனர். மேலும் பசிய தண்டினையுடைய குவளைப் பூவின் தூய இதழ்களைக் கிள்ளி அவ்வெட்சிப் பூக்களின் இடையிலே இட்டனர். தெய்வத் தன்மை பொருந்திய ஸ்ரீதேவி நகையோடு வலம்புரிச் சங்கு போன்ற நகையினையும் வைக்கவேண்டிய இடங்களிலே தலைக்கோலமாக வைத்தார்கள். பொட்டிட்ட மணங்கமழும் அழகிய நெற்றியிலே சுறாமீனைப் போலச் செய்துள்ள நகையின் பிளந்தவாய் தாழ்ந்து படும்படி வைத்து அழகு பெறச் செய்தார்கள். நன்கு சேரக் கட்டிய குற்றம் அற்ற கொண்டையிலே பெரிய குளிர்ந்த சண்பகப் பூவைச் செருகினார்கள். அதன் மேலே கரிய புற இதழினையும், துய்யினையும் உடைய பூக்களை மிகுதியாகக் கொண்ட மருத மரத்தினது ஒளிபொருந்திய பூங்கொத்துக்களை அடுக்கி இட்டார்கள். அதன் மேலே கிளையிடத்து அழகு பெற்று வளர்கின்றனவும், சாய்ந்து நீரின் கீழிடத்து இருப்பனவும் ஆகிய செந்நிற அரும்புகளால் இணைத்துக் கட்டிய மாலையைக் கொண்டையிலே சூழச் சுற்றினார்கள். தம்மில் அளவால் ஒத்தும், வளமையான காதுகளிலே வைத்து நிறைந்தனவும் ஆகிய அசோகின் ஒளி பொருந்திய தளிர்கள் நுட்பமான வேலைப்பாடமைந்த பூண்கள் புரளும் மார்பிலே அசைந்தாடின.

கோழி ஓங்கிய வெற்றிக் கொடி

........."திண்காழ்

32 - 39 நறுங் குறடு ......... வாழிய பெரிதன்று''

பொழிப்புரை:

திட்பமான வைரத்தையுடைய நறுமணம் பொருந்திய சந்தனக் கட்டையை உரைத்து அதனால் உண்டாகிய பொலிவும் நிறமும் உடைய சந்தனக் குழம்பை, நறுமணம் கமழ் கின்ற மருதமரப் பூங்கொத்தை அப்பினாற்போல, கோங்கினது குவிந்த அரும்பைப் போன்ற தம் இள மார்பின் மேல் மிகுதியாகக் கொட்டினார்கள். அந்த ஈரம் புலர் வதற்கு முன் விரிந்த வேங்கை மலரில் உள்ள நுண்ணிய மகரந்தப் பொடியை அதன் மேலே அப்பினார்கள். மேலும் அழகு பெறும்படி விளாமரத்தின் சிறிய கொழுந்து களைக் கிள்ளி அதன்மேலே சிதறிக் கொண்டார்கள். இங்ஙனமாக அழகு செய்து கொண்ட அவர்கள், ''அடியார்க்காகப் போர் மேற்கொண்டு பகைவரை அழிக்கும் கோழி உரு வோடு உயர்ந்த வெற்றிக்கொடி நீடூழி வாழ்க'' என்று வாழ்த்தினார்கள்;

விளக்கவுரை:

உயர்த்தியவனது விறல், கொடிமேல் ஏற்றப்பட்டது. மருதிணர் நிறத்திற்கு உவமம் என்பர் நச்சினார்க்கினியர்.

## சூரர மகளிர் ஆடுஞ் சோலை

39 - 44 .............. "ஏத்திப் பலருடன்
சீர்திகழ் ........... சென்னியன்."

பொழிப்புரை:

இங்ஙனமாகச் சூரர மகளிர் பலரும் ஒன்று கூடிச் சிறப்புடன் விளங்கும் மலையிடம் எங்கும் எதிரொலி உண்டாகும்படி பாடி விளையாடுவது ஒரு சோலை. அச்சோலையினை அடுத்து, பெண் குரங்கும் புகுந்தறியாதபடி ஓங்கி வளர்ந்த மரங்கள் அடர்ந்த அடுக்கடுக்காக இருக்கும் பக்க மலையிலே வண்டுகளும் மொய்க்காத தீச்சுடர் போலும் பொலிவினையுடைய செங்காந்தள் மலர்ந்து நின்றன. அம்மலர்களால் தொடுக்கப் பெற்ற பெரிய குளிர்ச்சியான கண்ணியைச் சூடிய திருமுடியை உடையவன் திருமுருகன்.

விளக்கவுரை:-

மந்தி - பெண்குரங்கு; சூரியன் என்பாரும் உளர். திருமுருகன் விரும்புவதால் காந்தட் பூவில் வண்டுகள் மூசுவதில்லை. மூசா – மொய்க்காத.

## பேய் மகளின் துணங்கைக் கூத்து

45 - 56 பார்முதிர் .............. துணங்கை தூங்க

பொழிப்புரை:-

பாறையினும் முற்பட்ட குளிர்ந்த கடல் கலங்கும்படி உள்ளே புகுந்து அச்சத்தைத் தரும் அரக்கர் குல முதல்வனைச் சிதைத்த, ஒளிவீசும் நீண்ட இலை போன்ற உருவினை உடைய வேல் ஏந்தியவன் முருகன்.

பேய்மகள் எண்ணெய் தேய்க்காமல் காய்ந்து போன மயிரினை உடையவள். வரிசையற்ற பற்களை உடையவள். பிளந்த வாயினள், சுழலுகின்ற கருவிழியுடைய பசிய கண்களையும் கொடிய பார்வையினையும் உடையவள். பிதுங்கிய கண்களையுடைய ஆந்தையோடு கொடிய பாம்புகளும் தொங்கும் காரணத்தால் பெரிய கொங்கைகளைத் தாங்கித் துன்புறுத்தும் காதினை உடையவள்; சுரசுரப்பான வயிற்றை உடையவள். அச்சம் விளைவிக்கும் நடையை உடையவள். இப்படியாகப் பார்ப்பவருக்கு அச்சம்தோன்றும்படி வரும்பேய்ப் பெண், இரத்தத்தில் தோய்ந்த கூர்மையான நகத்தையுடைய கொடிய விரல்களால் போர்க்களத்திலே, தான் கண்களைத் தோண்டி விழுங்கிய மிகுந்த புலால் நாற்றம் வீசும் பெரிய தலையை ஒளி பொருந்திய வளையலை யணிந்த பெரிய கைகளிலே தாங்கி, அச்சம் உண்டாகும்படி, அடியார்க்குப் பரிந்து, மேற்கொண்டு பகைவரைக் கொன்ற வெற்றி தந்த போர்க்களத்தைப் புகழ்ந்து பாடிக் கொண்டு தோள்களைத் தூக்கி அசைத்துப் புலாலை உண்ணும் வாயையுடையவளாய்த் துணங்கை என்னும் கூத்தினை ஆடினாள்.

**விளக்கவுரை:**

கூகை – கூ - கை. கை விகுதி பெற்ற தொழிற்பெயர் கூ, கூ என ஒலிக்கின்ற பறவையைத் தொழிலாகுபெயராய்க் குறித்தது. சிவபெருமான் பாம்புகளை அணிகலனாகக் கொண்டது போலப் பேய்மகள் ஆந்தைகளையும் பாம்புகளையும் அணிகலன்களாக் கொள்வாள்.

## செவ்வேள் சேய்

**57 - 61.** இருபேர் ..........................சேய்

**பொழிப்புரை:**

(அங்ஙனம் பேய்மகள் கூத்தாடும்படி) திருமுருகன் தனது சுடர் விடும் நெடுவேலால், மக்கள் வடிவும் விலங்கின் வடிவுமாக இரண்டு பெரிய வடிவினையுடைய சூரபதுமனுடைய ஒரே பெரிய உடம்பு வேறு வேறாக அற்று விழும்படி அவனுக்கு அச்சம் தோன்ற நெருங்கித் தாக்கினான். அசுரர் வல்லமை குன்றிப் போமாறு கீழ்நோக்கித் தொங்கும் பூங்கொத்துகளையுடைய மாமரமாக நின்ற தலைவனாகிய சூரபதுமனைப் பிளந்தான். குற்றமற்ற வெற்றியையும் நல்ல புகழையும் வேலேந்திய முருகன் பெற்றான்.

**விளக்கவுரை:**

விலங்கு வடிவமாகிய சூரனும், மனித வடிவமாகிய பதுமனும் ஆகிய இருவரும் ஓர் உருவாகிச் சூரபதுமன் என்னும் பெரிய உடலைப் பெற்றனர். திருமுருகனுடன் போர் செய்ய ஆற்றாமல் சூரபதுமன் கடலிலே சென்று கவிழ்ந்த பூங்கொத்துக்களை உடைய மாமரமாக நின்றான், திருமுருகனுடைய செவ்வேள் கடலுள் புகுந்து கலக்கி அம்மாமரத்தை இரு கூறாகப் பிளந்தது: ஒரு கூறு சேவலாயிற்று (சூரன்); மறுகூறு மயிலாயிற்று (பதுமன்).

## சொல்லுதலை நீ விரும்பினால்

**62 - 66** "சேவடி முன்னிய வினையே"

**பொழிப்புரை:**

திருமுருகனை அறிந்த தொண்டன் அறிய விரும்பிவந்த தொண்டனை நோக்கி, 'செவ்வேல் ஏந்திய தலைவனாகிய திருமுருகனின் சிவந்த திருவடிகளைத் தேடிச் செல்லும் தலைமையான உள்ளத்துடனே, நன்மையை விரும்பச் செய்யும் குறிக்கோளோடு பெருமான் விருப்பத்துடன் எழுந்தருளியிருக்கும் இடத்திற்குச் செல்லுதலை நீ விரும்பினால் இதற்குமுன் எடுத்த பல பிறவிகளிலும் தேடிய நல்ல நெஞ்சின் இனிய விருப்பமானது கை கூடும்படி இப்பொழுதே நீ எண்ணிய செயலின் பயனைப் பெறுவாய்.

**விளக்கவுரை:**

'புலம் புரிந்து உறையும் என்பதற்கு மெய்யுணர்வு தலைக்கூடப் பெற்றுத் திருவடிக்கீழ் தங்கும் (நெறி) என்ற பொருளும் சிறக்கும்,'' சினார்க்கினியர்.

## திருப்பரங் குன்றம்

**97 - 71** செருப்புகன்று....................கூடல் குடவயின்

**பொழிப்புரை:**

போருக்கு வாருங்கள் என்று அறை கூவித் தூக்கிக் கட்டிய, விண்ணில் மிக்கு யர்ந்த நீண்ட கொடியிலே நூலால் வரிந்து கட்டி அழகுறச் செய்த பந்தும் பாவையும் அறுக்க வரும் பகைவர்கள் இன்மையால் தொங்கிக் கொண்டிருந்தன. போர் தொடுக்கும் பகைவர் யாவரையும் தேய்த்து அழித்து விட்டபடியால் பகைவர் போர் அரிதாகி அற்றுப் போயிற்று, தலை வாயிலிலே திருமகள் சிறப்புடன் குற்றமில்லாத கடைப் பெருந் தெருவிலே அமர்ந்திருக்கின்றாள் மாடமாளிகைகள் மிகுந்த தெருக்களையுடையது கூடல் மாநகரம்.

**விளக்கவுரை!**

பகைவர்களைப் பெண்களாக்கி அவர்கள் கொண்டு விளையாடுவதற்குப் பந்தும் பாவையும் தூக்குவது அக்கால வழக்கம்

## திருமுருகன் திருப்பரங்குன்றில் எழுந்தருளியுள்ளான்

72 – 77 இருஞ்சேற்று..........................உரியன்

**பொழிப்புரை:**

நான்மாடக் கூடல் என்ற அம் மதுரை மாநகருக்கு மேற்குப் பக்கத்தில் கருஞ் சேற்றுடன் விரிந்த வயல்களில் முள்ளோடு கூடிய தண்டினையுடைய தாமரையின் மொட்டு இதழ் விரிந்து மலர்ந்தன. அம் மலர்களில் தூங்கி, விடியும் போது தேன் மணக்கும் செங் கழுநீர் மலர் விரியும்படி இரைந்து, தேன் உண்டு, ஞாயிறு எழும்போது கண்போல மலர்ந்துள்ள விரும்பத்தகும் அழகு வாய்ந்த மலைச்சுனைப் பூக்களில் அழகான சிறகுகளையுடையவண்டுகளின் அழகிய கூட்டம் ஒலி முழக்குவன. அத்தகைய திருப்பரங்குன்றிலே விரும்பித் தங்குதலையும் உரிமையாக உடையவன் திருமுருகன்.

**விளக்கவுரை;**

வாய் அவிழ்ந்து விரிந்த எனக் கூட்டுக. முள் – தாள் : முட்டாள். வன்மை வர வேற்றுமையில் நிலைமொழி ளகர மெய் டகர மெய்யானது; ளகர மெய்க்கு முன் வந்த தகரம் டகரமாகத் திரிந்தது. தாமரை மருத நிலத்திற்குரியது.

## திருச்சீரலைவாய்

78-82 வைநுதி ....................மேற்கொண்டு

**பொழிப்புரை:**

திருமுருகன் திருச்செந்தூருக்கு ஊர்ந்து வந்த யானை கூர்மையான நுனியையுடைய தோட்டி குத்திய வடுக்கள் அழுந்திய மத்தகத்தை உடையது. நெற்றியில் வாடாத தெய்வமலர் மாலை நெற்றிப் பட்டத்துடன் கிடந்து அசைந்தது தொங்கித் தாழ்ந்த மணிகள் நடக்கும் போது மாறி மாறி ஒலிக்கின்ற பக்கங்களையும் அவ்வாறு ஒலித் தற்கேற்ற மிக விரைந்த செலவினையும் உடைய கூற்றம் போன்ற யானையின் மேல் திருமுருகன் ஏறிவந்தான்.

**விளக்கவுரை:—**

வாடாமாலை – பொன்னரி மாலை.

தவ வலிமை உடையோரன்றி ஏனை எவரும் கூற்றுவன் வலிமையை எதிர்க்க முடியாதது போல முருகப்பெருமான் அன்றி வேறு யாரும் அவ்வேழத்தை ஊர்தல் இய லாது.

## திருமுருகத் தோற்றம்

*83- 90. ஐ வேறு................வாள்நிற முருகனே*

**பொழிப்புரை:**

திருமுடிகள் : திருமுருகன் ஐந்து வகையாக வேறுபட்ட வடிவங்களையுடைய திரு முடிகளை அணிந்திருந்தான். அவை செய்யத்தக்க வேலைப்பாடு முழுதும் முற்றுப்பெற் றன. அம்முடிகளுடன் கூடித்திகழ்ந்த ஒன்றற்கொன்று நிறத்தான் மாறுபாடு மிகுந்த பேரழகு பொருந்திய மணிகள் மின்னல் போன்ற ஒளியுடன் தலையில்பொலிவுறத் தோன்றின.

மகரக் குழைகள் : திருமுருகன் காதுகளில் பொன்னாலாகிய மகரக் குழைகள் அணிந்திருந்தான். அக் குழைகள் ஒளிதங்கி அசைந்தன. அவை வேலைப்பாடு நிறைந்த தங்கக் குழைகள் தொலைவிலும் ஒளி பரப்பும் நிலவொளி பொருந்திய திங்களைச் சூழ்ந்து நீங்காதிருக்கின்ற விண்மீன்கள் போன்று விளங்குவனவாய் ஒளிவீசின.

முகங்கள்: தலையில் முடியோடும், காதிற் குழையோடும் விளங்கிய முகங்கள் வருத்த மில்லாத கடமைகளை மேற்கொண்ட தங்கள் அருந்தவப் பணியைச் செய்து முடிப்பவர் களாகிய அன்பர்களுடைய மனத்திலே அவர்கள் நினைந்த வடிவோடு விரைந்து நேராக எழுந்தருளுகின்ற ஒளியும் நிறமும் உடையன.

**விளக்கவுரை:**

நிறைமதி திருமுருகன் முகங்களுக்கும், மீன் குழையணிகளுக்கும் உவமையாயின. முடிக்குரிய ஐவேறு உருவங்கள்:

"தாமம் மகுடம் பதுமங் கோடகம்
கிம்புரி முடியுறுப் பைந்தெனக் கிளப்பர்" (திவாகரம்)

## திருமுகங்களின் அருட்செயல்

*91–102 மாயிருள் ஞாலம்..................*
*..................வள்ளியொடு நகையமர்ந் தன்றே*

**பொழிப்புரை:**

அம்முகங்களில் ஒரு முகம் அருள் ஒளியால் அன்றி நீங்காத உயிரின் அக இரு ளாகிய, பெரிதாய்த் திணிந்த அஞ்ஞான இருளை நீக்கி, உயிரின் அறிவு குற்றமின்றி விளங்கும் பொருட்டு, பல அருளொளிக் கதிர்களை அன்பர் உள்ளத்தில் பரப்புவதாகும்

ஒருமுகம் அன்பு முதிர்ந்த அடியவர் புகழ்ந்து வாழ்த்த, அதனைப் பொருந்தி ஏற்றுக்கொண்டு, இன்ப அன்பின்வழி இனிதாக நடந்து, அன்பர் பேரன்பின் காரண மாக மகிழ்ந்து அவர் வேண்டும் வரங்களைக் கொடுத்தது.

ஒருமுகம் இறைவன் ஆணையாகக் களந்த மந்திர முறைமை தவறாது அழகிய தண்ணளியுடைய அறவோர் வேட்கை யுறுகின்ற ஞானநூல் கேட்டல், சிந்தித்தல், தெளிதலாகிய ஞான வேள்வி ஆராய்ச்சியை அளவைகளானும் பொருந்துமாற்றானும் ஆய்ந்து அறியச் செய்யும்.

ஒரு முகம் ஆராய்ச்சிக்கு எட்டாது அனுபவத்தால் காணும்படி மிகுந்துள்ள நூற் கருத்துக்களை ஏமப் புணையாக (ஞானாசிரியனாக) இருந்து சிவ நுகர்ச்சி இன்பம் உண்டாம் படி விருப்பச் செய்து, கலை நிறைந்த மதிபோலத் திகைப்பை நீக்கித் தெளிவிக்கும்.

ஒருமுகம் அறவோர்களின் பகைவர்களைச் செருக்குக்குறைத்து, மேற்சென்ற போரில் பகைவரை அழித்துச் செற்றம் பொருந்திய மனத்தோடு போர்க்களத்தை விரும்பியது.

ஆறாவது திருமுகம் வேடருடைய மடப்பம் பொருந்திய மகளும், கொடி போன்ற இடையுடைய இளம் பெண்ணுமாகிய வள்ளியம்மையோடு மகிழ்ந்திருத்தலை விரும்பியது.

## விளக்கவுரை:

மாயிருள் – மாய் இருள் என வினைத்தொகையாகக் கொண்டு மாய்கின்ற புற இருளைக் குறிக்கும் எனவும், மா இருள் என உரிச்சொற் றொடராகக் கொண்டு பேரிருள் எனப் பொருள்பட்டு உயிரின் அக இருளாகிய அறியாமையைக் குறிக்கும் எனவும் இரட்டுற மொழிதலாற் கொள்க.

ஓர்தல் – அளவைகளானும் பொருந்து மாற்றானும் தெளிய ஆராய்தல்''
(திருக்குறள் – பரிமேலழகர் உரை ஏமப்புணை – இனம் (திருக்குறள் 306)

## திருமுருகன் தோள்கள்

*102–106 ஆங்கம் ........................................ நிமிர்தோள்*

## பொழிப்புரை:

அவ்வாறாக அந்த ஆறுமுகங்களும் அத்தொழில்களைப் புரியும் முறையில் பயின்று இடையறாது செயலாற்றின. அம்முறைப்படி செயலாற்றலின் மாலை தாங்கிய அழகிய பெரிய மார்பிலுள்ள சிவந்த மூன்று வரிகளையும் தோள்களிடத்தே வந்து பொருந்தும் படி ஏற்றுக்கொண்டன. அத்தோள்கள் வலிமைமிக்கன. ஒளி பொருந்திய வேலை எறிந்து வென்று வளமை பொருந்திய புகழை மிகுதியாகப் பெற்றன. பகைவர் உடலைப்பிளந்து, மீண்டும் ஒளி பொருந்தியவேலை வாங்கிக்கொள்கின்ற உயர்ந்த தோள்கள்.

## விளக்கவுரை:

மார்பிலுள்ள சிவந்த வரிகள் தோள் அளவும் வந்து கிடத்தல் சிறந்த இலக்கணமாகும். தனது வேற்படையைத் திருமுருகன் செலுத்தியவுடன் பகைவருடைய உடலைப் பிளந்து விட்டுத் திரும்பத் தானாகவே திருமுருகன் தோளில் வந்து தங்கிவிடும். சுடர்–வேல் பண்பாகு பெயர்.

*107-118,* வின்செலல் ........................................................ இயற்றி

**பொழிப்புரை:**

1. ஒரு வலக்கை மேல்நெறிச் செல்லுகின்ற முறைமையினை யுடைய தவத் தலைவர்க்குப் பாதுகாவலாக இருந்து தாங்கியது. இந்தக் கைக்கு இணை யான இடதுகை இடது இடுப்பில் இணைத்து வைக்கப்பட்டது.
இக் கைகள் 'மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப் பல்கதிர் விரிந்த முகத் திற்கு' ஏற்ற தொழில் புரிந்தன.

2. வலக்கை நல்ல நிறம்பெற்ற ஆடை உடுத்த தொடை மேல் தங்கியது. அதற்கு இணையான இடக்கை ஒன்று தோட்டியைச் செலுத்தியது.
முருகன் தன்னை வழிபடுவார்க்கு வரங் கொடுப்பது யானைமேல் எழுந்தருளி வந்தேயாகலின் இவ்விரு கைகளும் வரங் கொடுத்த முகத்திற்கேற்ற தொழில் புரிந்தன.

3. இடக்கை சுற்றிய வியப்பைத் தரும் அழகிய பெரிய கேடயத்தோடு வலக்கை வேற்படையை வலமாகச் சுழற்றி இரு கைகளும் கேடயத்தையும் வேற் படையையும் வலமாகச் சுழற்றின.
இவ்விரு கைகளும் அந்தணர் வேள்வி ஓர்க்கும் முகத்திற்கு ஏற்ற தொழில் புரிந்தன.

4. வலக்கை ஒன்று தஞ்சங் காட்டி மார்போடு விளக்கமுற்றது. அதற்கு இணை யான இடது கை தாழ்ந்த மாலையோடு சேர்ந்து சேவடி காட்டிச் செம்மை யோடு விளங்கியது.
இவ்விரு கைகளும் எஞ்சிய பொருளை ஏமுற நாடித் திங்கள் போலத் திசை விளங்குகின்ற முகத்திற்கு ஏற்ற தொழில் புரிந்தன.

5 ஒரு வலக்கை உயர்த்துவதால் முன்கையிலிருந்து கீழே நழுவிய வளையலோடு மேலே சுழன்றது. அதற்கு இணையான இடது கை ஓசை இனிமையுடைய ஒலிக்கின்ற மணியை மாறி மாறி ஒலிக்கச் செய்தது. இவ்விரு கைகளும் பகைவரை அழித்துச் செல் சமம் முருக்கிக் களம் வேட்ட முகத்திற்கேற்ற தொழில் புரிந்தன.

6 ஒரு கை நீல நிற மேகத்தால் நிறைந்த மழையைப் பெய்வித்தது. மற்றக்கை ஒன்று சிறந்த தெய்வப் பெண்களாகிய வள்ளி தெய்வயானைக்கு மணமாலைசூட்டியது.

இத் திருகைகள் வள்ளியோடு நகையமர்ந்த முகத்திற்கு ஏற்ற தொழில் புரிந்தன.

விளக்கவுரை:

வேல் ஞான சக்தி, ஞான வேள்வி ஓர்க்கும் முகம் ஒன்று ''மார்பொடு விளங்கு கின்ற கை முனிவர்க்குத் தத்துவங்களைக்கூறி உரையிறந்த பொருளை உணர்த்தும்'' என்பர் நச்சினார்க்கினியர்.

''1 வாம மருங்கிற் கரமும், 2 கறுவு சமர் அங்குசஞ் சேர் கையும், 3 உய்த்த குறங்கில் ஒரு கரமும், 4 தெறு போர் அதிர் கேடகஞ் சுழற்றும் அங்கைத்தலமும், 5 கதிர் வாள் விதிர்க்குங் கரமும், 6 மார்பகத்தில் வைத்த கரதலமும், 7 பூந்தொடையல் சேர அணிந்த திருக்கரமும், 8 சிறுதொடி சேர் கையும், 9 மணி சேர்ந்த தடங்கையும், 10 ஓவாது மாரி பொழிந்த மலர்க் கரமும், 11 வானர மகளிர் மேவக் குழைந்தணைந்த மென்கரமும், 12 ஆரமுதம் தேவர்க்குதவும் திருக்கரமும'' – என்பது கந்தர் கலிவெண்பா.

## திருமுருகன் திருச்சீரலைவாய்ச் சேறல்

### 119-125 அந்தரப் பல்லியம்.........பண்பே.

பொழிப்புரை:

(யானை மேல் எழுந்தருளிய திருமுருகனும் இத் தொழில்கள் அனைத்தையும் உயிர்கட்கு அருள்புரி தொழில்களாகச் செய்து கொண்டு திருச்சீரலைவாய்க்குச் செல்கிறான். செல்லும் போது)

வானில் இசைக்கருவிகள் முழங்குகின்றன. திண்ணிய பொருந்திய ஊது கொம்புகள் மிக்கு ஒலிகின்றன. வெண்மையான சங்குகள் முழங்குகின்றன. வலிமையைத் தன்னிடத்தே கொண்டுள்ள இடியேறு போன்ற முரசுகள் முழங்குகின்றன. அம் முரசுகளோடு பல பீலிகளை யுடைய மயில் திருமுருகனது வெற்றிக் கொடி மேல் நின்று கூவுகின்றது.

இத்தகைய பல்லிய முழக்கங்களோடு வான் வழியாக விரைந்து செல்லுதலை மேற்கொண்டு உலகிலுள்ள உயர்ந்தோர் ஏத்திப் பாராட்டிய, மிக உயர்ந்த, நற்சிறப்பு வாய்ந்த, கடலலை அசைந்து வந்து தடவும் திருச்சீரலைவாய்க்கு, எழுந்தருளிச் செல்லுதலும் முருகப்பெருமானுக்கு நிலைபெற்ற குணமாகும்.

விளக்கவுரை-

**திருச்செந்திலை உயர்ந்தோர் ஏத்தல்**

நம் செந்தில் மேய வள்ளி மணாளர்..............'' (திருநா. தேவாரம்)

''வெண்டலைப் புணரி அலைக்குஞ் செந்தில்'' (புறம்: 56)

''திருமணி விளக்கின் அலைவாய்ச்
செருமிகு சேய்..............'' (அகம்: 266)

## திருவாவிநன்குடி

ஆவியர் குடியினராகிய பேகன் முதலிய குறுநில மன்னரது ஆட்சிக்குட்பட்ட இடமாதலின் அது ஆவி நன்குடி எனப்பெற்றது. திருமுருகனின் சிறப்பிடங்களில் ஒன்றாகவும் இருத்தலின் திரு என்னும் அடைமொழி பெற்றுத் திருவாவி நன்குடி எனப்பட்டதாதல் வேண்டும். சங்க நூல்களில் பொதினி எனப்படுவது இதுவே. திருமுருகனின் ஆயிரம் திருப்பெயர்களில் ஒன்று சித்தன். இப்பகுதி 'சித்தன் வாழ்வு' என்றும் வழங்கப்பெறும். இதனை இக் காலத்துப் பழநி என்பர்.

அயன், அரி, அரனாகிய முத்தொழில் புரிவோர் தங்கள் குறைமுடிக்கக் கருதித் திருமுருகனை வழிபட்டபதி இஃதேயாகும்.

## திருவாவிநன்குடியில் திருமுருகன் வீற்றிருக்கை
### *126-137,* சீரை தைஇய.........முன்புக

பொழிப்புரை:

(முனிவர்) மரவுரியினை ஆடையாக உடுத்திய உடையினர்; அழகும் வலம் புரிச் சங்கு போன்ற வெண்மையுமுள்ள நரைத்த முடியினை உடையவர்; அழுக்கின்றி விளங் கும் வடிவினர் மான் தோல் போர்த்தியதும் தசை வற்றி மெலிந்ததுமாகிய தம் மார் பினில் எலும்புகள் கோவையாகத் தோன்றும்படி உலவுகின்ற யாக்கையினை உடையவர்; ஒருங்கே நல்ல பல நாட்கள் உண்ணுது கழிந்த பின் உண்ணும் உணவினை உடையவர். மாறுபாட்டினையும் நெடுங்காலப் பகைமையினையும் போக்கிய மனத்தினை உடையவர். பலவற்றையும் கற்றோராலும் சிறிதும் அறியப்பெறாத அறிவினை உடையவர். பல கற்றவர்களுக்கும் தாமே எல்லையாய் அமைந்த தலைமைப் புலமையர். காமமும் கடுங் கோபமும் நீங்கிய தெள்ளறிவுடையவர். தவத்தால் வரும் மெய்வருத்தம் இருப்பினும். மனவருத்தம் சிறிதும் அறியாத இயல்பினர். யாருடனும் வெறுப்புக்கொள்ளாத நல்லறி வினையுமுடைய அம்முனிவர்கள் உள்ளம் உவப்பமுன்னே (சென்றனர்) செல்ல.

விளக்கவுரை:

சீரை - மரவுரி, தைஇய என்பதற்கு ஆடையாகத் தைத்து என்றும் காவிக்கல் கரைத்த நீரில் தோய்த்தது என்றும் பொருள் கொள்வர். முனிவர்கள் நரைமுடியினை வலமாகச் சுற்றியுள்ளதை வலம்புரிபோல் ஒத்துவிளங்கிற்று என்றார்.

நூல்களால் உணரப்படுவன உலக அறிவும், உயிர் அறிவுமே. இறைவன் திரு வருளாலன்றி நூல் பல கற்றவரும் சிறிதும் பெறமுடியாத இறையறிவு பெற்றவர்கள் முனிவர்கள்.

## கந்தருவா யாழ வாசிக்கத் தம் மகளிரோடு வந்த காட்சி
### *138-147* புகைமுகந்து.........விளங்க

பொழிப்புரை:

புகையைக் கையால் முகந்து உடுத்திக் கொண்டதுபோல் தோன்றுகின்ற அழுக்கு ஏறாத தூய ஆடையினையும் மொட்டுக்கள் மலர்ந்த புதிய மலர்மாலை யணிந்த மார் பினையும், கூர்மையான செவியால் சுருதியை அளந்து நரம்பு கட்டிய, சுற்றுதல் பொருந் திய வார்க் கட்டினையுடைய நல்ல யாழிசையில் பயின்ற அன்புடைய உள்ளத்தோடு எக்காலமும் மெல்லிய சொற்களில் விருப்பம் உடையோராகிய கந்தருவர், இனிய யாழ் நரம்புகளை மீட்டி இசை எழுப்ப மக்களுக்கு உண்டாகும் நோய் இல்லை யாமாறு ஆக்கப்பெற்ற உடம்பினையுடையவரும், மாமரத்தினது ஒளி விளங்குகின்ற தளிர் ஒத்த நிறத்தினை உடையவரும், உரைத்த பொன் ஒளிர்வதுபோல் ஒளிரும் தேமலை உடை யவரும், கண்ணுக்கு இனிய ஒளிபொருந்திய பதினென் கோவை மேகலையை அணிந்து தாழவேண்டிய இடம் தாழ்ந்தும், உயர வேண்டிய இடம் உயர்ந்தும் இருக்கின்ற இடுப்பை யுடையவரும் ஆகிய குற்றமில்லாத தம் பெண்டிருடன் குற்றமற்றுத் (துலங்கினர்) துலங்க.

விளக்கவுரை:

புகை முகந்தன்ன என்பது ஆடையின் மென்மைக்கும் நெகிழ்ச்சிக்கும் பண்புவமையாகும். 'புகைவிரிந்தன்ன பொங்கு துகில், ஆவியன்ன பூந்துகில்' என்பர் பிறரும். கந்தருவப் பெண்டிர் உடம்பு நோயற்றது. பருமம், பதினென் கோவையாகிய இடுப்பணி ஆடையின் மீது அணியப் பெறுவது.

இத்தகு மகளிரொடு கந்தருவர் தம் யாழை வாசிக்கும்படி திருவாவிநன்குடியில் வந்து நின்றனர்.

## திருமால் திருமுருகன்பால் வருதல்

**148 - 151** கருவொடு ...... ...... செல்வனும்

பொழிப்புரை:-

உறைக்குள் அடங்கிக் கிடந்த நஞ்சினையும் உள்துளையினையும் உடைய வெள்ளிய பற்களையுடையதும், நெருப்புப்போல் மூச்சு விடுவதும், கண்டோர்க்கு அச்சம் தோன்றும் கொடிய வலியினை உடையதும் ஆகிய பாம்பு சாகும்படி அதனை அடிக்கும், பல வரிகள் அமைந்த வளைந்த சிறகினையும் உடைய கருடன் எழுதப் பெற்ற நீண்ட கொடியினை உயர்த்திய திருமாலும்.

விளக்கவுரை:-

தூம்பு - உள்துளை

*''புள்ளணி நீள் கொடி புணர்நிலை'' (சிலம்பு 11:136)*
*''விண்ணுயர் புட்கொடி விறல் வெய்யோன்'' (புறம் 56)*
*''பூவைப்பூ மேனியான் பாம்புண் பறவைக்கொடி'' (பு. வெ. 227)*

## உருத்திரன் திருமுருகன்பால் வருதல்

*152 - 154* வெள்ளேறு, வலவையின் ......... செல்வனும்

பொழிப்புரை:-

வெண்ணிறம் உள்ள காளையைத் தம் வலப்புறத்தில் வெற்றிக்கொடியாக உயர்த்தியவனும் பலராலும் புகழப்படும் திண்ணிய தோள்களையும், இமைத்தல் அறியாத மூன்று கண்களையும் உடையவனும், உம்மையம்மை தன் இடப்பாகத்தில் பொருந்தி விளங்கும் செல்வனும் முப்புரங்களையும் எரித்து அழித்தவனும் ஆகிய உரம் மிக்க உருத்திர மூர்த்தியும் (சிவனும்).

விளக்கவுரை:

முத்தொழிலில் அழித்தலைப் புரியும் தகுதி நோக்கிக் காத்தலைப் புரியும் திருமாலின் பின் உருத்திரன் கூறப்பட்டான். மூவெயில் – மூன்று கோட்டை.

## இந்திரன் திருமுருகன்பால்வருதல்

*155 - 159* நூற்றுப்பத்து ............... செல்வனும்

பொழிப்புரை:-

ஆயிரம் கண்களையும், நூறாகிய பல வேள்விகளையும் செய்து முடித்துப் பகைவரைக் கீழ்ப்படுத்திக் கொன்ற வெற்றியினையும், முன்புறம் உயர்ந்த நான்கு கொம்புகளையும், அழகிய நடையினையும், நிலத்தில் தாழ்ந்து தொங்குகின்ற வளைந்த பெரிய கைகளையும் உடையதாய்ச் சிறப்பாய்க் கூறப்படுகின்ற ஐராவதம் என்னும் யானையின் பிடரியில் ஏறி அமர்ந்த இந்திரப் பதவியாகிய செல்வத்தால் சிறந்து விளங்குகின்றவனுமாகிய இந்திரனும்.

விளக்கவுரை:-

நூற்றுப்பத்து — ஆயிரம், நூறு வேள்வி முடித்தோரே இந்திரப் பதவி அடைவர். ஐராவதம் என்னும் தேவ யானையின் பிடரியில் ஏறி அமரும் உரிமை இந்திரனுக்கே உரியது.

## மூவரும் நான்முகன் பொருட்டு வந்தனர் என்பது

*160 - 165* நாற்பெருந் தெய்வத்து ............... சுட்டி

பொழிப்புரை:-

நான்கு பெருந் தெய்வங்களை உடையதும், நல்ல நகர்கள் நிலைபெற்றதுமாகிய இவ்வுலகத்தைக் காக்கும் தொழிலையே விரும்பிய ஒரு கொள்கையினையுடைய பலராலும் புகழப்படுகின்ற மூவரும் தத்தம் தொழில்களை மீண்டும் பெற்றுத் தாம் இழந்த தலைமையினை எய்தும்படி (முத்தொழில்களும் தடைப்பட்டு) மயக்கமுற்றுக் கிடந்த இந்நிலவுலகத்தில், திருமாலின் உந்தித் தாமரை பெற்ற, அழிவில்லாத ஊழிக்கால வாழ்நாளையுடைய நான்முகனாகிய ஒருவன் பொருட்டு வந்து தோன்றினர்.

விளக்கவுரை:-

நாற்பெருந் தெய்வம்: கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்னும் நாற்றிசைகட்கும் உரிய காவல் தெய்வங்களாகிய இந்திரன், எமன், வருணன், குபேரன்.

ஞாலம் - உலகம், ஞால் - நால் - தொங்கு: விண்ணிடைத் தொங்குவது பற்றி ஞாலம் எனப்பட்டது.

## ஏனைத் தேவர்களும் திருவாவிநன்குடியில் வந்துநிற்கும் காட்சி

*165 - 174* காண்வர ................... வந்துடன்காண

பொழிப்புரை:-

பகற் பொழுதினைப் போன்று தெளிவாக விளங்கும் மாறுபாடு இல்லாத அறிவினையும் நான்கு வகை வேறுபட்ட தன்மையினையும் உடைய முப்பத்து மூவரும், பதினெட்டு வகையான உயர்ந்த நிலைமை பெற்றவராகிய தேவ கணங்களும் விண்மீன்கள் பொலிவு பெற்றுத் தோன்றினாற் போன்ற தோற்றமுடையவராகவும்; அவ்விண்மீன்கள் தொகுதியாய்க் கூடிக் காற்றோடு எழுந்தாற்போன்ற விரைந்த போக்கினை உடையவ

ராகவும்; காற்றிடையே நெருப்பு எழுந்தாற்போன்ற வன்மை உடையவராகவும் நெருப்பு உண்டாக அதனால், இடியேறு இடித்தாற் போன்ற குரலினை உடையவராகவும்; உயர்ந்தனவாகிய தம் தொழில்களில் உண்டாய குறைகளைத் தீர்த்துக் கொள்ளுமாறு காட்சிக்கினிமையாய் வானில் வந்து சூழ்ந்து திருமால் முதலியவர்களுடன் சென்று ஒருசேரக் காணுமாறு (ஆவிநன்குடியில் திருமுருகன் அசைதலும் உரியன்.)

விளக்கவுரை:-

இகலில் காட்சி - முரண்பாடு இல்லாத தெளிந்த அறிவு. உடுமண்டலத்தில் எழும் காற்று அவ்வுடுக்களை வாரிச் செல்வதுபோல யாவரும் விரைந்து நடந்தனர். இதனை ''மீன்கள் உலாவுகின்ற இடத்தைச் சேர்ந்து காற்று எழுந்தாலொத்த செலவினையுடையவர்'' என்பர் நச்சினார்க்கினியர்.

## முருகன் ஆவிநன்குடியில் அமர்ந்திருத்தல்

*175 - 176 தாவில் கொள்கை .................. உரியன், அதாஅன்று*

பொழிப்புரை:-

வருத்தமற்ற அருட் கற்பினையுடைய தெய்வயானையுடன் சிலகாலம் ஆவிநன்குடியில் இருத்தலும் உரியன் திருமுருகன்.

(அவனை அங்கு சென்று கண்டு உமது குறை தீரப் பெறுவீர் என்று ஆற்றுப் படுத்தியவாறு)

அதாஅன்று - அதுவுமல்லாமல்,

விளக்கவுரை:-

தாவில் – வருத்தமில்லாத
''தாவே வலியும் வருத்தமும் ஆகும்'' தொல். 827

## திருவேரகம்

இப்பகுதி சோழநாட்டின்கண் காவிரிக்கரையில் உள்ளது. இது கண்டோர் விரும்பும் அழகமைந்தது. ஏர்த் தொழில் நிரம்பிய பதியாதலின் திரு ஏரகம் எனப் பெயர் பெற்றது.

ஏரகம் மலை நாட்டகத்துள்ள ஒரு திருப்பதி என்பர் நச்சினார்க்கினியர்

''சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே
பாரிருள் பௌவத்தின் உள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே''

– சிலம்பு (குன். குரவை பாட்டுமடை 7)

வெண்குன்று - சுவாமி மலை என்பது அரும்பதவுரை

## ஏரகத்து அந்தணர் இயல்பு

*177-182 இரு மூன்று ............ இருபிறப்பாளர்.*

### பொழிப்புரை:

ஏரக அந்தணர் (ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும்) அறுவகைத்தாய் நன்மை பொருந்திய ஒழுக்கத்தினின்றும் வழுவாதவர்கள். அவர்களுடைய தாய் தந்தையராகிய இரு முதுகுரவரும், வெவ்வேறு புகழ்ச்செயல்கள் புரிந்த பழமையான குடியில் தோன்றியவர்கள். அவர்கள் தமது நாற்பத்தெட்டு ஆண்டுகளாகிய இளமைப் பருவத்து நற்காலத்தை நல்லொழுக்க நெறியில் கழிக்கும் பொருட்டு அறநூல்கள் கூறுகின்ற கொள்கைகளை கடைப்பிடித்து ஒழுகுபவர்கள். இம்மை, அம்மை, வீடு என்னும் மூவகைப் பேறுகளையும் கருதிச் செய்கின்ற நாற்சதுரம், முச்சதுரம், வில் வடிவங்களில் அமைக்கப்பட்ட மூவகை எரிகளால் இம்மைச் செல்வமும், மறுமைச் செல்வமும் முத்திச் செல்வமும் பெறுவார்கள். எல்லா உயிர்க்கும் பொதுவாய மெய்ப்பிறப்பும், சிறப்பாகிய உபநயனம் தீக்கை முதலியவற்றால் உளதாகும் மெய்யுணர்வுப் பிறப்பும் என்ற இரு பிறப்புமுடைய அந்தணர்.

### விளக்கவுரை:

மூன்று வகை குறித்த முத்தீச் செல்வம் - நாற்சதுரம் முச்சதுரம் வில் வடிவமாகிய மூன்று வகையைக் கருதின ஆகவனீயம், தக்கிணாக்கினி, காருகபத்தியம் என்ற மூன்று தீயால் உண்டாகிய செல்வம்' என்பர் நச்சர்.

## அந்தணர் முருகனை வழிபாடு செய்யும் முறை

*182 - 189 பொழுது அறிந்து .............................. உரியன்*

### பொழிப்புரை:

முருகனை, வழிபட வேண்டுங் காலங்களைப் பிழையாது தெரிந்து அவ்வக்காலங்களில் போற்றி வழிபாடல்களைக்கூற, ஒன்பது இழைகளை ஒவ்வொன்றும் மும்மூன்றாகக் கொண்ட மூன்று புரிகள் அமைந்த நுண்ணிய பூணூலைத் தரித்திருப்பார்கள். நீராடும் போது தோய்க்கப்பட்டு உலராத ஈர ஆடை உலர்ந்தவுடன் உடுத்திக் கொள்வார்கள். தலைமேல் குவித்த கையினை உடையவராய்த் திருமுருகனைப் புகழ்வார்கள். திருமுருகனுக்குரிய ஆறெழுத்து மந்திரத்தைத் தன்னகத்தே வைத்து அடக்கியுள்ள காரணத்தால் அறிதற்கு அருமையான மறை நூற்கேள்வி மொழியை (உபதேச மொழியை) நாவினால் இயன்ற அளவு பிறர் செவிக்குக் கேட்காதவாறு பன்முறை ஒலித்துக் கொண்டு திருமுருகன் வழிபாட்டிற்கு உரிய மணம் மிகுந்த நன்மை பொருந்திய நாள மலர்களை எடுத்து ஏந்தி இடுவார்கள். அதனால் திருமுருகன் ஏரகத்தில் உறைகின்றான்.

### விளக்கவுரை:-

''வழிபாடு விதித்த வேளைகளில் செய்யப்பெறல் வேண்டும். இல்லையெனில் பாவ வினையாகும்'' சிவஞான பாடியம்.

ஐந்தெழுத்து மந்திரம் - நமசிவாய
ஆறெழுத்து மந்திரம் - குமரனுடைய

ஆறு முகங்களுள் ஒன்றாய் அமைந்த ஓங்காரத்தையும் சேர்த்து ''ஓம் நமசிவாய'' என்பது. சரவணபவ என்றும் கூறுவர்.

குன்றுதொறாடல்

"சேயோன் மேய மைவரை உலகமும்" (தொல் அகத். 5) என்பதனால் மலைகள் யாவும் குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகனுடைய ஆடல் இடங்களாகும் குன்று தோறும் விளையாடுதல். எனவே இது திருப்பரங்குன்றம். திருச்சீரலைவாய் ஆகிய தலங்களைப் போன்று தனியொரு தலம் அன்று. திருமுருகன் ஆடுகின்ற மலைகளை எல்லாம் குறிக்கும்.

வேலன் ஒப்பனை

190-192 அதா அன்று, பைங்கொடி.........கண்ணியன்

பொழிப்புரை:

பச்சைக் கொடியில் நறுமணமுள்ள சாதிக்காயை இடையிடையே வைத்து. அழகிய தோட்டையுடைய தக்கோலக் காயைக் கலந்து, காட்டு மல்லிகைப் பூவோடு வெள்ளைத் தாளி மலரையும் கூதாளி மலரையும் சேர்த்துக் கட்டிய கண்ணியைத் தலையில் அணிந் திருந்தான்.

விளக்கவுரை:

நறைக்காய் — சாதிக்காய்

கானவர் குரவை

193-197 நறுஞ்சாந்து........குரவை அயர

பொழிப்புரை:

கொடிய தொழில் செய்கின்ற குறவர் நறுமணம் பொருந்திய சந்தனம் பூசிய நிறம் விளங்குகின்ற மார்பினை உடையவர். வில் தொழிலில் வல்லவர். கொலை செய்யும் குணம் படைத்தவர். அவர்கள் நீண்ட மூங்கில் குழாய்களில் வைத்து நாட்பட்ட முதிர்ந்த இனிய தேன் தெளிவைச் சிறிய மலையிலுள்ள சிறு குடில்களில் வாழ்கின்ற உறவினருடன் உண்டு களித்துத் தொண்டகச் சிறுபறையாகிய முருகியம் முழக்கிக் குரவைக் கூத்தாடினர்.

விளக்கவுரை:

தேக் கள் தேறல்-தேனால் செய்த கள் தெளிவு என்பர் நச்சர்.

"குரவை யென்பது எழுவர் மங்கையர்
செந்நிலை மண்டலக் கடகக் கைகோத்து
அந்நிலைக் கொட்ப நின்றாட லாகும்"

அடியார்க்கு நல்லார்.

## மகளிர் தொகுதி

*198–200 விரல் உளர்ப்ப.........தொகுதியொடு*

**பொழிப்புரை:**

விரல்களால் அலைக்கப்பட்டு விரிந்ததால் வேறுபட்ட மலர வடிவும் இனிய மணம் பெற்ற. சுனையில் அரும்பிய வண்டுகள் மொய்க்கும் கண்ணிகளை மகளிர் சூடி இருந்தார்கள். அக் கண்ணிகளோடு மாலைகளையும் சேர்த்துக் கட்டிக் கூந்தலில் அணிந்திருந்தார்கள்.

கட்டிய கஞ்சங்குல்லைப் பூவோடு, கடம்பின் சிவந்த காம்புடைய வெண்மையான பூங்கொத்துக்களையும் இடையில் வைத்து, வண்டுகள் தேனை அருந்தும் அழகிய தழை ஆடையை மேகலை அணிந்த இடுப்பில் உடுத்திருந்தார்கள். அவர்கள் மயில் போன்ற சாயலர், அழகிய மடப்பம் பொருந்திய நடையினர். நரம்பு ஒலித்ததுபோன்ற இனிய குரல் தொகுதியினர். (வந்தனர்)

**விளக்கவுரை:**

பன்மலர்த் துதையத்
தழையும் கோதையும இழையும் என்றிவை
தைஇயினர் மகிழ்ந்து...... (கலித்தொகை: 102)

## முருகன் அருளுதல்

*206-219 செய்யன்...........பண்பே*

அதா அன்று

**பொழிப்புரை:**

திருமுருகன் செம்மையான திருமேனி உடையவன். செந்நிற ஆடையினன். சிவந்த அடிமரத்தை உடைய அசோகின் தளிரைக் காதில் அணிந்தவன் அரையில் கச்சுக் கட்டியவன். கால்களில் கழல் அணிந்தவன். தலையில் வெட்சிப் பூங் கண்ணி சூடியவன். குழலிசையில் மகிழ்பவன். கொம்பொலியில் இன்புறுபவன். சிறிய பல இசைகளை விரும்புபவன். செம்மறிக் கிடாய் ஏறுபவன். மயில் ஊர்பவன் சேவற் கொடியினன். உயர் வடிவினன். வாகுவளையணிந்த தோளினன் சிறிய புள்ளிகளையுடைய வெண்ணிற உடையைத் தரையில் தோயும்படி இருப்பில் கட்டியவன் மத்தளம் முழங்கும் கையினால் அதனைத் தாங்கி மெல்லிய மகளிரை உடன் கொண்டு, குன்றுகளில் எல்லாம் தன்னை அடைந்தோரைத் திருவருள் புரிந்து ஆட்கொள்ளும் தன்மையும் கொண்ட குணத்தினன். அதுவன்றி,

**விளக்கவுரை:-**

தகரன்- செம்மறிக்கிடாய் ஏறுபவன்

## பழமுதிர் சோலை

**218 - 221.** சிறுதினை.......................நிலையினும்

பொழிப்புரை:

சிறிய தினை அரிசியை மலர்களோடு கலந்து வைத்து ஆட்டுக்குட்டியை அரிந்து படைத்துச் சேவற் கொடியையும் பக்கத்தில் அமைய நிறுத்தி, ஊர்கள் தோறும் எடுத்த விழாக்களில் அவன் எழுந்தருளுவான். அடியவர் வாழ்த்துதல் காரணமாக அவர்களுக்கு எளியவனாய் மனம் பொருந்தி நிற்கின்ற இடங்கள் உண்டு.

### முருகன் உறையும் இடங்கள்

222 - 226. வேலன்..................நிலையினும்

பொழிப்புரை:

வேலைக் கையில் கொண்டு ஆடுகின்ற படிமத்தான் (பூசாரி) வெறியாடல் நடத்தும் களத்திலும் முருகன் எழுந்தருள்வான். காட்டிடத்திலும், சோலையிலும், ஆற்றிடைக்குறையிலும், ஆற்றுப்பகுதியிலும், குளத்திலும், வேறு பல குடியிருப்புகளிலும் நாற்சதுக்கங்களிலும், சந்திகளிலும் புதுமலர்கள் நிறைந்த கடப்ப மரத்தடியிலும், ஊர்ப் பொது இடங்களிலும், அம்பலத்திலும், பற்றுக்கோடாக நிறுத்திய சிறு தூணாகிய நிலையிலும் தங்குவான்.

விளக்கவுரை:

முருக வழிபாடு நடத்தும் தேவராளன் (வேலன்) வேலைக் கையில் கொண்டு வெறியாட்டு அயர்வான். 'வேலன் புனைந்த வெறியயர் களம்' (குறு: 23) (சேய்- மேன்மைப் பொருள். பிள்ளை அர் விகுதி சேர்த்துப் பிள்ளையார் என்று முருகனைப் பண்டு அழைத்தனர்.

### வழிபாட்டு வகை

227 - 231 ஆண்டலைக் கொடி........................சிதறி

பொழிப்புரை:

நீர் தெளித்துத் தூய்மைப் படுத்திச் சேவற்கொடி நிறுத்தியும், ஆன் நெய்யுடன் வெண் சிறு கடுகைக் கந்தின் மேல் பூசியும், மென்மையான உள்ளங்கனிந்த மொழிகளை ஓதித் தலைகுனிந்து வணங்கிச் செழிப்பான மலர்கள் தூவியும் வேறுபட்ட நிறங் கொண்ட வேட்டியும் துண்டுமாகிய இரு ஆடைகளை உடுத்தியும், சிவப்பு நூலை ஆடைக்குக் காப்பாகக் கட்டியும், வெள்ளைப் பொரி சிதறியும் முருகனை வழிபடலாம்.

232 - 238 மதவலி.........................வாழ்த்தி

பொழிப்புரை:-

மிகுந்த வலிமை பொருந்திய பெரிய கால்களையுடைய கொழுத்த ஆட்டுக் கடாவின் உதிரத்துடன் கலந்த தூய வெள்ளை அரிசியைப பலியாக இட்டும் பிற பலவகைத் தானியங்களையும் பிரம்புத் தட்டில்வைத்துப் பரப்பி, சிறிய பச்சை மஞ்சளோடு மணங் கமழும் சந்தனத்தைத் தெளித்துச் செவ்வரலைப் பூவால் ஆகிய குளிர்ந்த மாலைகளை ஒத்த அளவில் அசையும் படி தொங்க விட்டு மலைப் பக்கத்திலுள்ள நல்ல கோவிலில் முருகனை வழிபடலாம்.

அரலை - அரளி (குறு 314) 'முக்கட் செல்வர்

நகர்' (புறம் 6) நகர் கோவில்

239 - 244 நறும்புகை... ...................வியன்நகர்.

பொழிப்புரை:

நறுமணத் தூபங் காட்டிக் குறிஞ்சிப் பண் அமைந்த இசைப்பாட்டல் பாடி' அருவி ஓசையுடன் இனிய இசைக் கருவிகள் ஒலிக்க, அழகான உருவுடைய பல மலர்கள் தூவிக் கண்டோர் அஞ்சும்படி உதிரங் கலந்த செந்தினையைப் பரப்பிக் குறவர் குலப் பெண் தொண்டகப் பறையைப் பிற இசைக் கருவிகளுக்கும் பாடலுக்கும் ஏற்ப நிற்கச் செய்து மாறுபட்டோர் அஞ்சி முருகனை அடையுமாறு வழிப்படுத்திய நல்ல வடிவு அமைந்த பெரிய கோவிலிலும் அவனை வழிபடலாம்.

முருகியம் - தொண்டகற்பறை நறையின்

நறும்புகை (பரி 14-25)

245-249 ஆடுகளம்..............அறிந்தவாறே

பொழிப்புரை

வெறியாடு களம் எதிரொலிக்க வாழ்த்துப்பாடிப் பல வகை இசைக் கருவிகளுடன் சேரக் கொம்பையும் ஊதி இசைப்பித்துக் கொடிய மணியையும் ஒலிப்பித்துப் பின்வாங் காத தன்மையை மேற்கொண்ட அவனது பிணிமுகம் என்னும் யானையை வாழ்த்தித் தன் அருளை நாடுவோர் விரும்பியது விரும்பியவாறே பெற்ற வராய்த் தனக்கு வழிபாடு செய்யும்படி அந்த அந்த இடங்களிலெல்லாம் முருகன் தங்கியிருத்தலும் யாவரும் அறிந்ததே!

விளக்கவுரை:

சிலம்ப - எதிரொலிக்க எனப்பட்டது

பிணிமுக ஊர்தி ஒண்செய் யோனும்(புறம் 56)

முருகன் அமர்ந்து ஏத்தல்

250-259 ஆண்டாண்டு..................குழவி

பொழிப்புரை:

அங்கங்கே இருப்பானாயினும் வேறெங்கு இருப்பினும் இருக்கட்டும். காணத்தக்க கோலத்தோடு (காட்சிதரின்) முதன் முதலில் நீ கண்ட பொழுதுமுகத்தால் விரும்பி வாழ்த்துக் கூறி கைகூப்பி வழிபட்டு ஏத்தி அவன் திருவடியில் உன் முடி பொருந்தப் பணிந்து [பின் வருமாறு போற்றுவாயாக)

ஓங்கிய பெரிய கைலைமலை உச்சியில் நீலப் பசுமை நிறங்கொண்ட பொய்கை யானது, ஐவருள் ஒருவனது உள்ளங்கையினின்று வாங்கிக்கொள்ள, ஆறுதாயர் பாலூட்டி வளர்த்த ஆறு திருவடிவம் பொருந்திய சிவபெருமான் மைந்தனே கண்டோர் மருளும் இமய மலைகளின் மகனே மாறுபட்டோர்க்கு யமன் போன்றவனே வெற்றி வடிவான வனே வெல்லும் போர்க்குரிய வெற்றித் தெய்வத்தின் மகனே அணிகலன்கள் பூண்ட பழமையான வளுமாகிய நான்காடுகிளாளின் குழந்தையே!

விளக்கவுரை:

நீலப் பைஞ்சுனை - நீல மலர்களையுடைய பசுமையான ஆழமுடைய சுனை என்க. இச்சுனை சரவணம் எனவும், நீலம் என்ற சொல் ஆகு பெயராய்த் தருப்பையை உணர்த்தும் எனவும் கொள்வர் நச்சினார்க்கினியர்.

ஐவருள் ஒருவன்-விசும்பும் வளியும் தீயும் நீரும் நிலனுமாகிய ஐம்பூதக் கடவுளருள் தீக்கடவுள்

260-269 வானோர்...........................முருக!

வணங்கி நிற்கும் தேவர்களின் விற்படைக்குத் தலைவனே! கடப்ப மாலை அணிந்த மார்பனே! நூல்களை எல்லாம் அறிந்த புலவனே! போர்வினையில் ஒப்பற்ற வனே! பொருகின்ற வீறு மிகுந்த இளம் வீரனே! அந்தணரின் செல்வமாய் இருப்பவனே அறிஞர் பாராட்டும் புகழ்மலையே! வள்ளி தெய்வானை கணவனே! வலிமை மிக்க இளைஞர்களின் தலைவனே! வேலாயுதம் ஏந்திய கையால் அமையும் வெற்றிச் செல்வனே! (கிரௌஞ்ச) மலையைப் பிளந்து அழித்த குறையாத வெற்றியோடு, வானளவும் உயர்ந்த மலைகளையுடைய குறிஞ்சி நிலத்திற்குரியவனே! பலரும் புகழும் நல்ல மொழியில் வல்லவராகிய புலவர்க்குத் தலைவனே! பெறுதற்கரிய பேற்றை அருளுகின்ற மரபினையுடைய பெரும் பெயர்க் கடவுளாகிய திருமுருகனே!

270-276. நசையுநர்க்கு...............பேராள!

பொழிப்புரை:

விரும்பி வேண்டுபவர்க்கு நிரம்ப நுகரக் கொடுக்கும் புகழுக்குரியவனே! இல்லாது துன்புறுவோர்க்கு அன்போடு கொடுக்கும் பொன்னணி பூண்ட மேலோனே! நெருங்கிய போர்களைச் செய்து முடித்த உனது வெற்றியைக் கொண்டாடும் மார்பினால் அடியாராகிய பரிசிலரைக் காக்கும் நல்ல அழகமைந்த வள்ளலே! பெரியோர் போற்றும் பெரும் பெயர்க் கடவுளே! சூரர்களைக் கொன்ற மிகு வலிமையுடையவனே! போர் மேற்கொண்ட போர்மறவனே! தலைசிறந்தவனே!

276-280 எனப்பல, யானறி...............அளவையின்

என்று பலவாறாக நான் அறிந்த மட்டும் கூறினேன். "உன்னை இத்தன்மையன் என்று அளந்து அறிதல் நிலைபெற்றுள்ள உயிர்க்கு அரிதாகும், ஆதலின் உனது திரு வடியை உள்ளத்தில் கருதிவந்தேன். உன்னோடு ஒப்பார் இல்லாத மெய்யறிவு உடை யோனே!" என்று நீ கருதியதை உரையாத பொழுதிலேயே.

விளக்கவுரை:

முருகன் கருவியறிவு உயிரறிவினால் (பாசஞான பசு ஞானங்களால்) அளந்தறிய ஒண்ணாதவன். மெய்யுணர்வால் (பதிஞானத்தால்) அறியப்படுபவன்.

281-286 குறித்து உடன்...........பல ஏத்தி

பொழிப்புரை;

(உன் வேண்டுதலைக் கேட்டு) மனத்துட் கொண்டு உடனே, வேறுபட்ட பல வடிவங்களையுடைய சிறிய பல கூளியராகிய பூத கணங்கள் விழாக் கொண்டாடும் இடத்தில், முருகன் திருமுன்பு நின்று, ''பெருமானே! அறிவு முதிர்ச்சி பெற்ற வாய் மொழிகளை உடைய இரவலன் (பரிசிலன்)! நீ இரக்கம் காண்பித்தற்கு உரியவன். அவன் உனது வளமான புகழ் கேட்டுக் கொடையை விரும்பி இனிய, நல்ல பல மொழிகள் கூறி வாழ்த்தி வந்துள்ளான் (எனக் கூறவும்).

287-295 தெய்வஞ்சான்ற...........நல்குமதி

பொழிப்புரை:-

தெய்வத் தன்மை அமைந்த வடிவத்தையும், வானை அளாவி நிற்கும் உயர்வையும் கொண்ட முருகக் கடவுள் அங்கு வந்தடைந்து, கண்டோர் அஞ்சும் பேருருவை உள்ளொடுக்கி, என்றும் தம்மிடம் உள்ளதாகிய நன்மணம் வீசும் தெய்வத் தன்மை கொண்ட தன் இளமை அழகோடு காட்சி தந்து, ''அச்சங் கொள்ளாதே! பாதுகாப்பேன். உனது வருகையை அறிவேன்'' என்று அன்பான இன்சொல் கலந்து இயம்பி (அடைக்கலந்தந்து) நீங்குதல் இல்லாமல் என்றுங் கருநிறங் கொண்ட கடல் சூழ்ந்த இவ் உலகத்தில் நீ ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் சிறந்த பெறுதற்கரிய திருவருளாகிய பரிசை அளிப்பான்.

295-302 பலவுடன், வேறுபல்.........உதிர

பொழிப்புரை:

பல (துளி) சேர்ந்து, வேறு வேறான பல வெள்ளைத் துணிக் கொடிகள் போல அசைந்து, அகில் மரக் கட்டைகளையும், சந்தன முழுமரத்தடிகளையும் புரட்டி அருவிகள் பாய்ந்தோடும். சிறு மூங்கில்களின் பூக்கள் ஆடுங்கிளைகள் வாடும்படி அவற்றை வேரோடு சாய்க்கும், மலையில் உள்ள சூரிய வட்டம் போன்று கட்டப்பட்ட இனிய மணங்கமழும் தேனகூடு அழிந்து சிதறும், நல்ல பல ஆசினிப் பலாவின் முதிர்ந்த சுளைகள் அருவி நீரில் கலந்து செல்லும். மலைமேல் நின்ற சுரபுன்னை மரத்தின் மணங்கமழும் மலர்கள் சிதறிவிழும்.

302-309. ஊகமொடு, மாமுக.........சாய

பொழிப்புரை:-

அவ்வருவி மந்தியும் கறுத்த முகத்தையுடைய கருங் குரங்கின் ஆணும் நடுங்கும்படியும், பெரிய பெண் யானை குளிர் கொள்ளும்படியும் நீர்த்துளிகளை வீசும். பெரிய ஆண் யானையின் முத்துக்கொண்ட சிறந்த கொம்புகளை அகத்தடக்கி. மலையிலுள்ள பொன்னும் மணியும் நிறம் விளங்கும்படி தத்தித்தத்திப் பாயும். பொன்னைப் பக்கங்களில் ஒதுக்கும். வாழையின் பெரிய அடிமரம் சிதையவும், தெங்கின் இளநீர்த் தேங்

காய் குலையிலிருந்து சிதறி விழவும் அவற்றில் மோதும். அத் தேங்காய்கள் தாக்குதலால் மிளகுக் கொடியின் கருமை நிறக் கொத்துக்கள் சரிந்து விழும்.

விளக்கவுரை :-

(இவ்வடிகளில் அருவிக் காட்சி மிக நயமாக அமைந்துள்ளது) சிறு சிறு தடைகளைக் கடந்து சல சல எனப் பாய்தலைத் ''தத்துற்று'' என்றார்.

309 - 317......................பொறிப்புற
மடநடை......மலைகிழவோனே!

பொழிப்புரை:-

புள்ளிகளைக் கொண்ட மேலிடத்தையும், அடக்கமான நடையினையும் உடைய பெண் மயில் பலவற்றுடன் கோழிகளும் அஞ்சி ஓடும். காட்டுப் பன்றியின் ஆணுடன் பெரிய பனைமரத்தின் வெளித்தோன்றும் செறும்பு போலும் கருநிறங்கொண்ட மயிரினையும் உடைய உடம்பினையும் வளைந்தது அடிகளையும் உடைய கரடியும், மலைப் பிளவிலுள்ள குகைகளில் அடங்கிக் கிடக்கும். கருங் கொம்பினைக் கொண்ட காட்டுப் பசுவும் நல்ல காளையும் கதறும்.

(இந் நிகழ்ச்சிகள் எல்லாம் உண்டாக) உயரத்தினின்று இழும் என ஒலித்து ஒழுகி வரும் அருவியையுடைய பழமுதிர் சோலைமலைக்கு உரிமையாளனாகிய திருமுருகன் வீற்றிருக்கிறான்.

★